ஈழத்தமிழர் எழுச்சி ஊர்வலம்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

சுடரொளி

முரசு 2 30-1-86 வியாழன் (தை 17 ஐ. அவ். 19) முழக்கம் 255

(கிறிஸ்ரி ரஞ்சன், எட்வார்ட் லியோன்)

அண்மைக் காலத்தில் தமிழீழம் கண்டிராதவகையில் ஈழத்தமிழரின் எழுச்சியையும், விடுதலை உணர்ச்சியையும் எடுத்துக்காட்டும் வகையிலான, சுமார் பதினேயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட வரலாற்றுப் பெருமை பெறும் ஊர்வலம் நேற்று யாழ்நகரில் நடைபெற்றது. தமிழீழத்திலிருந்து ஆயுதப் படையினரை வெளியேறுமாறும் ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயச் சட்டத்தை நீக்குமாறும் கோரி இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. தமிழ் மக்களின் மனக் கொதிப்பையும், பாதுகாப்பற்ற வாழ்க்கையையும் எடுத்துக் காட்டும் வகையில் இவ் ஊர்வலம் நடைபெற்றது. நேற்றுக் காலை 9-30 மணிக்கு யாழ். பெருமாள் கோவிலடியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி யூடாக ஆரியகுளம் சந்தியையடைந்த இந்த பிரமாண்டமான ஊர்வலம் அங்கிருந்து பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி என்பவற்றுக்கூடாகச் சென்று யாழ். செயலகத்தை நண்பகல் பன்னிரண்டு மணியளவில் அடைந்தது. வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுச் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வூர் -6ஆம் பக்கம் பார்க்க

மன்னரில் நேற்று வானத்திலிருந்து குண்டு தாக்குதல்

போராளிகள் நேரடி மோதல்; பலர் பலி?

மன்னரிலுள்ள கட்டுக்கரையில் நேற்று நண்பகல் முதல் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாகவும் ஹெலிகப்டரிலிருந்தும் இராணுவத்தினர் பரவலாகக் குண்டு வீசியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் மூப்பது பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

கட்டுக்கரையில் ஹெலிக்கப்டர்கள் மூலம் இராணுவத்தினர் இறங்கியபோது தாம்மேற் கொண்ட தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவர்கள் மூல்லத்தீவில்

திரும்பிச் சென்றவிட்டதாகவும் மீண்டும் நண்பகல் இரண்டு மணியளவில் நான்கு ஹெலிக்கப்டாகளில் இராணுவத்தனர் வந்தபோது கடும் மோதல் இடம்பெறுவதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று மாலை அறிவித்தார்கள்.

நேற்றுக் காலை 6 30மணிக்கு பதினெட்டு கவசவாகனங்க —6ஆம் பக்கம் பார்க்க

அஹிம்சை தோற்குமாயின் ஆயுதத்தை ஆதரிப்போம்

"மக்கள் போராட்டம் சரியான முறையில் நடந்தால் அது நிச்சயம் வெற்றிபெற்றே தீரும். நாங்கள் நீதிக்காக உயிர், உடைமைகளை இழந்து போராடிக் கொண்டிருக்கின்றோம். எமது இந்த போராட்டம் என்றோ ஒருநாள் வென்றே தீரும். இங்கு புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தினுல் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து நாம் கொழும்பிலுள்ள எமது தாய்ச் சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். இதனை யடுத்து தாய்ச் சங்க பொதுச் செயலாளர் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்து அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார். நாம் எமது போராட்டத்தை வென்றெடுக்க பல்வேறுபட்ட வழிகளில் போராட வேண்டும்" என்று நேற்று நடைபெற்ற ஊர்வலத்தின் பின் செயலக முன்றலில் நடைபெற்றகூட்டத்தில் உரையாற்றிய அரசாங்க விவிதர் சேவைச் சங்க பிரதிநிதி திரு. ஆர். தவராஜா குறிப்பிட்டார்.

இஸ்லாமிய தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த ...6ஆம் பக்கம் பார்க்க

ஊர்வலத்தில் ஆசிரியர்கள் கூட்டுறவு ஊழியர் பங்கு

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தீவுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட பல சங்கங்களும் கலந்து கொண்ட ஊர்வலம் இந்துக் கல்லூரியிலிருந்து நேற்று ஆரம்பமானது.

ஈழவர் முன்னணியினர் பலத்த கோஷமெழுப்பி "ராணுவத்தை வட பகுதியிலிருந்து வாபஸ் பெறு" "அப்பாவி மலையக மக்களை துன்புறுத்தாதே" "இஸ்லாமிய மக்களை வாழவிடு" "அரச பயங்கரவாதத்தை நிறுத்து" எனும் சுலோக அட்டைகளையும் தாங்கிக் கொண்டு சென்றனர். ஈழவர் முன்னணியினர் வருத்துறை உட்பட பல இடங்களிலிருந்தும் ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். பல ஒலிபெருக்கி வாகனங்களும் கோஷமெழுப்பிக் கொண்டு ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களை ஊக்கு ...6 ஆம் பக்கம் பார்க்க

பீரங்கித் தாக்குதலினுல் நான்கு பேர் படுகாயம்

(வண்ணைர் பண்ணை)

மூல்லைத்தீவில் நேற்றுராணுவத்தினர் நடத்திய பீரங்கித் தாக்குதலினுல் நால்வர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரி கொண்டுவரப்பட்டனர்.

மூல்லைத்தீவு கச்சேரி விகிதர் கே. யோகசுந்தரம் (47) ஏழாலை, ஆ. ரெபாட் (20) மூல்லைத்தீவு, செ.செபஸ்தியாம்

—6ஆம் பக்கம் பார்க்க

மட்டுநகரில் பூரண ஹர்த்தால்

மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் அரச பயங்கரவாத சம்பவங்களைக் கண்டிக்கும் வகையில் நேற்று மட்டக்களப்புப் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈரோஸ் இயக்கத்தினுல் இந்த ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை மட்டுநகர் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் குண்டொன்று வெடித்ததுடன் நகரில் பதற்றம் நிலவியது.

ஹர்த்தாலை முன்னிட்டு பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. புகையிரத சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன. வங்கிகள், தபால் நிலையங்கள் உட்பட சகல அரசாங்க அலுவலகங்களும் ஊழியர்கள் வரவின்றி மூடப்பட்டிருந்தன.

கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததால் நகரம் வெறிச் சோடிக் காணப்பட்டது.

மலையகத்தில் 36 மணிநேரம் தொடர்ச்சியாக ஊரடங்கு

மலையகத்தின் ஒன்பது பொலிஸ் பிரிவுகளில் நேற்று முன்தினம் இரவு ஏழு மணிக்குப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை ஏழு மணிவரை நீடிக்கப்பட்டது.

இதே வேளையில் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் இது சம்பந்தமாக ஆராயப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தி ...6ஆம் பக்கம் பார்க்க

சம்பூரிலும் மோதல்

(திருமலை)

மூதூரிலுள்ள சம்பூர் கிராமத்தில் ராணுவத்துக்கும் போராளிகளுக்கு மிடையே நேற்று கடும் மோதல் இடம் பெற்றதாகவும், இதனுல் பலர் இறந்திருக்கலாமெனவும் செய்தி அச்சுக்குப் போகும் போது கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வைத்தியர்கள் சங்கம் இனப்பிரச்சினையை உடன் தீர்த்துவைக்க வேண்டும்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் இதற்கான தீர்மானம் நிறை ... 6ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் சுடரொளி

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கருவாடுக்குத் தேவையான அரைத்த உப்புத்தூள் (50 கி. மூடை) விற்பனைக்குண்டு. M G M. Forage Stores. No. 208, 1st Cross St. and 781, K. K. S. Rd., Jaffna R/16370

விற்பனைக்கு

ரேசர் செடிகளுக்கான 'அதி விசேஷ உரம்' எங்களிடம். மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. Forage Stores. No. 208, 1 st Cross St., Jaffna. . P. 22611. R/16371

தேவை

றொபி, இனிப்பு செய்வதில் அனுபவம் வாய்ந்த வேலை ஆள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். C/o. ஈழமுரசு. R/16397

தவறிவிட்டது

சி. சக்திக்குமரன் 690810158 இலக்க அடையாள அட்டை சாவகச்சேரி—யாழ்ப்பாணம் மினிபஸ் ஒன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அனுப்பி வைக்கவும். சின்னத்தம்பி, முத்துமாரியம்மன் கோவிலடி, மட்டுவில். R/16399

திசைமாறியும் திங்கில்லாது திரும்பினர்

(ஒட்டுசுட்டான்)

கடந்த வாரம் முல்லைத்தீவுக் கடற்கரையில், கடல் அலைகளினால் திசைமாறப்பட்டு வந்து இறங்கிய வேறு இனத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் அப்பகுதி இளைஞர்களினால் பூரண விசாரணை செய்யப்பட்டபின் சந்தேகம் நீங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின் அவர்கள் தங்குவதற்குப் பாதுகாப்பான இடமும், உணவு வசதியும், நிதி உதவியும் கொடுத்து அவர்களை வவுனியா வரை கொண்டு சென்று அவர்களின் சொந்த ஊர்களுக்கு பாதுகாப்பாக இளைஞர்கள் அனுப்பினர். திசை மாறி வந்த மீனவர்கள் இளைஞர்களுக்கு நன்றிகூறி விடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவில் ஊர்வலமும், ஆர்ப்பாட்ட மறியலும்

(வேலணை நிருபர் கே. வி. கே ஜெயச்சந்திரன்)

யாழ்ப்பாணப் பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளதை கண்டித்தும், தமிழ் மக்கள் அநியாயமாக இராணுவத்தினரால் பலியாவதை எதிர்த்தும் புங்குடுதீவு வெகுஜன விழிப்பு இயக்கத்தினர் திரு. சதாசிவம் சேவியர் தலைமையில் புங்குடுதீவு கந்தசுவாமி கோவிலிலிருந்து சுலோகங்களை தாங்கிய வண்ணம் ஊர்வலமாக வேலணை வரை வந்து இங்குள்ள அரச அலுவலகங்கள் முன்னால் மறியல்போராட்டத்தை நடாத்தினர்.

இவர்களது இந்த மறியல் போராட்டத்தினால் வேலணை உதவி அரசாங்க அலுவலகம், வேலணை உப அலுவலகம், வேலணை ஆரம்ப நீதிமன்றம், வேலணை ஆயுள் வேத மருத்துவமனை போன்ற அரச அலுவலகங்கள் யாவும் பூட்டப்பட்டு அலுவல்கள் நடைபெற முடியாதிருந்தது. இதனால் சில அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு வலயத்தை அகற்றும் படி கோரியும், அப்பாவித் தமிழ் மக்களை கொலை செய்யாதிருக்கும்படி கோரியும் தீவுப்பகுதி மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றும்படியுமான மகஜரொன்றை வெகுஜனவிழிப்பு இயக்கத்தின் சார்பில்திரு. சதாசிவம் சேவியர் வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரத்திடம் கையளித்தார்.

இம்மறியல் போராட்ட போராளிகள் வீதித்தடைகளையோ அன்றி பாடசாலைகளையோ தடை செய்யவில்லை. வெகுஜன விழிப்பு இயக்கத்தினர் பல சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் காணப்பட்டனர்.

REPAIR SERVICE
றேடியோ, T.V மற்றும் மின் உபகரணங்களை நல்ல முறையில் திருத்த—
டைனமிக் என்ஜினியரிங் லிமிரெட்
476, பிரதான வீதி, சுண்டுக்குளி. பி 1029

கூட்டுறவாளர்கள் மகஜர்

பயங்கரவாத ஒழிப்பா? அப்பாவிகள் படுகொலையா?

(ஏழாலை)

யாழ்.மாவட்டக் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப் பணியாளர்களும், கடையடைப்புச் செய்து கண்டனவூர்வலத்தின் இறுதியில் யாழ். அரச செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் அவரது அரசுக்கும் கையளிக்குமாறு கோரி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் வழங்கும் மகஜர்:

நாடு கண்டுள்ள துக்ககரமான இன்றைய சூழ்நிலையில் உயிருக்குப் பயந்து வாழ்கின்ற மக்கள் கூட்டத்தின் மத்தியில் கூட்டுறவாளர்களும் கூட்டுறவுப் பணியாளர்களுமாகிய நாமும் சிக்கித் தடுமாறுகின்றோம். அடுத்த நிமிடம் உயிரோடிருப்போமோ என்ற நிச்சயமற்ற நிலையில் அங்கலாய்த்து, அவலப்பட்டு, தினமொரு திசையை நோக்கிப் பச்சிளம் பாலகர்களையும், நடக்கமுடியாத முதியவர்களையும் இழுத்துக் கொண்டு ஓடிப்போய் அகதிகளாகவும், பிரேதங்களாகவும் மாறிக் கொண்டிருக்கின்ற யதார்த்த நிலையை எண்ணி மனம் வெதும்புகின்றோம்.

மக்களின் வாழ்வியல் தேவைகளோடு எங்களை மிக நெருக்கமாக இணைத்துக் கொண்டுள்ளவர்கள் கூட்டுறவாளர்கள் என்பதையும், இவ்வாறான நிம்மதியற்ற,நிச்சயமற்றநிலையில், பிறந்த மண்ணிலேயே உயிருக்காக இறைஞ்சுகின்ற வேதனையான நிலையில் எங்கள் சமுதாயக் கடமைகளை எவ்வாறேனும் செய்ய முடியாது என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இன்னல்களும், இடையூறுகளும் நிவர்த்திக்கக் கூடுமென்ற நம்பிக்கையின் வசப்பட்டிருந்த நாம், மேலும் துயரங்களால் சிதைக்கப்படுகின்றோம்.

எங்கள் அலுவலகங்களை நோக்கி நாம் பிரயாணம் செய்யப் பாதுகாப்பில்லை.

அலுவலகங்களைநோக்கி ஆயுதப்படையினரின் குண்டுகள் விரைந்து வராதுஎன்பதற்கும், நாம் உயிரோடு வீடு திரும்புவோம் என்பதற்கும் உத்தரவாதமில்லை.

எமது கண்ணீர் விட்டு நாம் வளர்த்த பயிர்களான அலுவலகக் கட்டிடங்கள் ஆயுதப்படையினரால் தரை மட்டமாக்கப்படும் கொடுமைகளுக்குக்குறைவுமில்லை.

அலுவலகங்களை நோக்கி நாம் சென்றால் எங்கள் இல்லங்களில் இருக்கின்ற சிறுவர்களுக்கும், பெண்களுக்கும், பெற்றோர்களுக்கும் கூட எவ்வித பாதுகாப்புமில்லை.

இவ்வாறான நிலையில் எமது சமுதாயப்பணியை நாம் மேற்கொள்வது எவ்வகையிலும் சாத்தியப்படாது. எனினும், எமது சமுதாயப் பொறுப்புணர்வு காரணமாக இற்றை வரை பல உயிரிழப்புக்களுக்கும், உடைமைச் சிதைவுகளுக்கும் மத்தியிலும் கூட நாம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

எமது மிகச் சாதாரண மனித உரிமைகளுக்கே உத்தரவாதமளிக்கப்படாத நிலையில் எங்கள் உணர்வுகள், இதயக் குமுறல்கள், தங்கள் பார்வைக்குப் புலப்படவேண்டுமென்பதற்காக 29-01-86 புதன் கிழமையாகிய இன்றையதினம் மாபெரும் கண்டன ஊர்வலமொன்றையும் பூரண கடையடைப்பொன்றையும்நடாத்தி யாழ் அரச செயலகம் வரையில் வந்து நின்று இம் மகஜரைக் கையளிக்கின்றோம்.

பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலைக்காளாகும் ஈவிரக்கமற்ற செயல்களை நிறுத்துமாறும், கூட்டுறவாளர்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் உத்தரவாதமளிக்குமாறும் ஒன்றுபட்டு நின்று கேட்டுக்கொள்கின்றோம்,

மணி ஓடரை மாற்றுவதற்கு மூன்று வாரம் அலைச்சல்

(கல்வியங்காடு)

வெளியூர்களிலிருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள பல உபதபால் நிலையங்களுக்கு வரும் மணியோடர்களை மாற்றிக் கொள்வதற்குப் பல நாட்கள் எடுப்பதால் பொது மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில உபதபால் நிலையங்களில் மணியோடர்களை மாற்றிப் பணமாகப் பெற்றுக் கொள்வதற்கு வாரக் கணக்கில் மட்டுமல்லாது, மாதக் கணக்கில் கூடக் காத்திருக்க வேண்டியுள்ளது.

கையில் மணியோடரை வைத்துக் கொண்டு பல தபால் நிலையங்களில் மணிக்கணக்கில் கால் கடுக்க நிற்கும் பலரைத் தினமும் பல இடங்களில் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இவர்களில் அநேகம் பேர் பெண்களாவர். இவர்களுக்கு 'இன்று போய் நாளை வா!' என்ற பதிலே சொல்லப்படுகிறது.

அண்மையில் மத்திய நாட்டுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள உப தபால் நிலையமொன்றுக்கு அனுப்பப்பட்ட மணியோடர் ஒன்றை மாற்றிப் பணம் பெற்றுக் கொள்வதற்கு ஒரு பெண்ணுக்கு சுமார் மூன்று வாரகாலம் எடுத்தது. இன்னொரு பெண் இரண்டு வார காலமாகியும் சிலாபம் பகுதியிலிருந்து வந்த மணியோடரை மாற்றிக் கொள்ள முடியாமல் தபால் நிலையத்துக்கும் வீட்டுக்குமாக அலைந்து கொண்டிருக்கிறார்.

சிலர் தபால் நிலையங்களில் மணியோடரைக் கொடுத்து விட்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

வங்கி மூடிய நிலையில்

(வவுனியா)

வவுனியா மக்கள் வங்கி, அங்கு இடம் பெற்ற துப்பாக்கி அபகரிப்பு காரணமாக நேற்று முன் தினமும் திறக்கப்படவில்லை. இது பல அசௌகரியங்களை உருவாக்கியுள்ளதாம்.

திருவிழா

(புலோலி)

இலங்கையின் இரண்டாவது கதிர்காமமெனப் போற்றப்படும் தென் புலோலியூர் உபயகதிர்காம முருகன் ஆலயத்தில் தைப்பூச திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

பிறந்தநாள் வாழ்த்து

* கொழும்புத்துறை, சிவநாதன் தேவமனோகரி தம்பதியின் மகன் பிரகதீஸ்வரன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

* பாஷையூர் மிக்கேல் மங்களேஸ்வரி தம்பதியின் மகன் குயின்லி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

கல்விக் கந்தோர் போக்கு; பிரஜைகள் குழு கண்டனம்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் அகதி மாணவர்களினதும், பாதிக்கப்பட்ட மாணவர்களினதும், விண்ணப்பங்களை யாழ். கல்வித் திணைக்களம் பகடைக் காய்களாகத் தூக்கி வீசுவதாகப் பருத்தித்துறை பிரஜைகள் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானமொன்றில் மனிதாபிமானமற்ற இச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் பிள்ளைகளின் விண்ணப்பங்களை ஏற்று கல்வித் திணைக்களம் ஹாட்லிக் கல்லூரிக்கு அனுமதி வழங்கவேண்டுமெனவும், இடப் பிரச்சினை இருப்பின் அதனை பிரஜைகள் குழு தீர்த்துவைக்கும் எனவும், இதனைக் கல்வித் திணைக்களம் நிராகரித்தால் பொது நிறுவனங்களும், கல்விசார் நிறுவனங்களும் கண்டன அறிக்கைகள் வெளியிட்டும், ஆர்ப்பாட்டம் செய்தும் நியாயம் கிடைக்கப் போராடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரம்பைக்குளத்தில் திடீர் சூடு; பலர்கைது; பதற்றநிலை

(வவுனியா)

நேற்றுமுன்தினம் ஹொரவப்பொத்தானை வீதியில் ரம்பைக்குளத்தில் இராணுவ தேடுதல் வேட்டையின் போது துப்பாக்கிப் பிரயோகத்தில் வில்லியம் ஜூட் நிரஞ்சன் என்பவர் காயத்திற்குள்ளான தோடு, இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். மேலும்; ஹொரவபொத்தானை வீதியிலுள்ள கராஜிலிருந்து பிராண்டன்வாஸ் (16) என்பவரும், மற்றும் கந்தையா மனோகரன் (20) இராஜசிங்கம் குலேந்திரன் (22) ஆகியோரும் காலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன் தினம் வவுனியா நகரில் பரவலாகப் பல்வேறு பகுதியிலும் தேநீர்க்கடை உரிமையாளரி ஒருவர் உட்பட பத்துப்பேர் முகமூடித்தலையாட்டி மனிதரினால் அடையாளம் காட்டப்பட்டுக் கைதாகியுள்ளனர்.

திங்கள் மாலை இராணுவ தேடுதல் வேட்டையின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ரம்பைக்குளம், கோவில்குளம் ஆகிய பகுதிகளில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

திருநாள்

(தருநகர்)

குருநகர், காணிக்கை மாதா கோவில் வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் இம்மாதம் 24-ந் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன. இன்றும் மாலை 5-30 மணிக்கு நவநாள் திருப்பலிப் பூசை பங்குத் தந்தை பீற்றர் துரைரட்ணம் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.

எதிர்வரும் 1-ந் திகதி சனிக்கிழமை மாலை சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும், 2-ந் திகதி காலை 7 மணிக்குத் திருநாள் பாடற் பலிப் பூசையை யாழ். ஆண்டகை வந். வ. தியோகுப்பிள்ளை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் திருநாட் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.

மரண அறிவித்தல்

திரு. ஜோன் பிரான்சிஸ்பிள்ளை

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திரு. ஜோன் பிரான்சிஸ்பிள்ளை (Rtd. Field Ass Health Dept.) காலமானர். அன்னார் திருமதி லில்லி மேரியின் அன்புக் கணவரும், அன்ரனி றெஜினோல்ட் (Central Hospital Colomdo), திருமதி பிறிம்ரோஸ் குணரத்தினம் (ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), காலஞ்சென்ற நந்தினி, மேரி காமினீற்ரா, அன்ரனி சில்வெஸ்ரர் (Care Products Private Ltd. Colombo), வினி பிறிடா, ரெக்லா வினோதினி, பெனிக்ஸ் ரஜனி, அன்ரனி வாசிங்டன், வெனிற்ரு வெலானி ஆகியோரின் அன்புத் தந்தையும். திரு. ஜேம்ஸ் குணரத்தினம் (Bahrain), திரேஸ் கமலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரொசான், சிரோன் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 30-1-86 அன்று காலை 10 மணி பளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

R/16398 மனைவி, பிள்ளைகள்

அகதிகளாகிய மக்கள் அச்சுவேலியில் அடைக்கலம்

(வயாவிளான்)

அச்சுவேலியிலுள்ள 'பென்காம்' சீர்திருத்தப் பாடசாலையில் 600க்கும் மேற்பட்டோர் புகலிடம் தேடி வந்தமர்ந்துள்ளனர். கடந்த சில நாட்களாக குரும்பசிட்டி, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், வயாவிளான் பகுதிகளில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து 1000 கிலோ மீற்றர் பாதுகாப்புப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டமையினைத் தொடர்ந்தும் அப்பகுதிகளில் உள்ள மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

வயாவிளான், பலாலி, மயிலிட்டி போன்ற பகுதிகளில் இருந்து மக்கள் இன்னும் வெளியேறிக் கொண்டும் இருக்கின்றார்கள். இது தவிர வாடகை வீடுகளிலும், உறவினர்களது வீடுகளிலும் பலர் தஞ்சமடைந்துள்ளனர். அநேகமானோர் தமது விவசாய நிலங்களினை, பயிர்களுடன் 'அரைகுறை' நிலையில் விட்டும் வெளியேறுவதனைக் கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

அச்சுவேலி 'பென்காம்' சீர்திருத்தப் பாடசாலையிலும், குட்டிப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்திலும் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தினர் அரிசியையும் சீனியினையும், பருப்பு போன்ற உணவுப் பொருள்களையும் வழங்கினர். இவை தவிர அவ்வூர்ப் பொதுமக்கள் ஸ்தாபனங்கள், இயக்கங்கள் என்பனவும் பலவித உணவுப் பண்டங்களையும் வழங்கினர்.

ஆங்கில தினப் போட்டிகள் மார்ச் மாதம் ஆரம்பமாகும்

(ஏழாலை)

பாடசாலை ரீதியிலான ஆங்கில தினப் போட்டிகள் மார்ச் பதினைந்தாந் திகதிக்கு முன்பாகவும், வட்டாரப் போட்டிகள் ஜூலை பதினைந்தாந் திகதிக்கு முன்னும் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என யாழ். கல்வித் திணைக்களம் வடமாநிலப் பாடசாலைகளுக்கனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் போட்டியை நடத்தாதவர்கள் வட்டாரப் போட்டியில் பங்கு பற்ற முடியாதெனவும் முப்பது நாட்களுக்கு முன்பதாக பாடசாலைப் போட்டித் திகதிகள் ஆங்கில வட்டாரக்கல்வி அதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒரு மாணவன், மாணவி இரண்டு தனி நிகழ்ச்சிகளிலும், இரண்டு குழு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றலாம். தனி நிகழ்ச்சிக்கு இரு போட்டியாளரும், குழுவானால் ஒன்றும் அனுமதிக்கப்படும். வட்டாரப் போட்டியில் முதலிடங்களைப் பெறும் தனி நிகழ்ச்சியும், முதலாவதாகத் தெரியப்படும் குழுவும் மாவட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறும்.

க. பொ. த. (உ. த.) வகுப்புள்ள பாடசாலைகள், க.பொ. த. (சா. த.) வகுப்புள்ள பாடசாலைகள், ஆண்டு 1-6 வரையுள்ள பாடசாலை என தரம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தரத்திலுள்ள பாடசாலைகளுக்குள்ளும் போட்டிகள் வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதால் சிறிய பாடசாலைகளும் வெற்றி பெறும் வாய்ப்பைப் பெறும்.

மாரியம்மன் வழிபாடு மூலம் இடர் நீங்கி இன்பம் பெருகும்'

(வேலணை)

''பண்டைய காலத்தில் பெண் தெய்வத்தை மக்கள் வழிபட்டு வந்துள்ளார்கள். இதற்கான காரணம் வரட்சியைப் போக்கி செழிப்பை உண்டாக்குவதற்காகவே. வரட்சி என்று நாம் குறிப்பிடுவது யாதெனில் அம்மை, பொக்களிப்பான், சின்னமுத்து போன்ற வெப்ப நோய்களையே. இவற்றை நீக்கி மக்களை குளிர்ச்சியடைய செய்து சாந்தியை ஏற்படுத்துவதற்காகவே, மாரியம்மனை வழிபாடு செய்து வந்தால் மேற்கூறிய நோய்கள் யாவும் தீருமென கருதியே இவ்வழிபாடு பண்டையகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.''

மேற்கண்டவாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பஞ்சதள இராசகோபுர மஹா கும்பாபிஷேக வைபவத்தில் கௌரவ பேச்சாளராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில், ''அம்மனது அம்சமாக மாரியம்மன் கருதப்பட்டது. சாதாரணமாகக் கிராமிய தெய்வமாக வழிபட்டு வந்த மக்கள் பிற்காலத்தில் ஆகம அடிப்படையில் கோவில் அமைத்து முறைப்படி வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளனர். தெய்வங்களில் மகிமையுடையதும், தாயின் அன்பு, பரிவுடனும் கூடிய இத்தெய்வத்தை நாம் அன்னையென்றும், ஆதிபராசக்தி என்றும் முத்துமாரியென்றும், மாரி அம்மன் என்றும் பல்வேறு நாமங்களில் வழிபாடு இயற்றி வருகின்றோம்.

தமிழ் மக்கள் தாய்மைக்கே முதலிடம் வழங்கி வந்துள்ளனர். அது ஆதி காலத்தில் மட்டுமல்ல. இக்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே மாரியம்மனை தாய்த் தெய்வமாக கருதுகின்றார்கள். பண்டைய இந்து நாகரீகத்துடன் இவ்வழிபாடு சம்பந்தப்பட்டுள்ளது. வேண்டிய யாவர்க்கும் அருள் பாலிக்கும் அம்பிகை வெப்பு, பிணி, துயரம் யாவும் நீங்கி சுபீட்சம் நிலவி நாடு செழிக்க நாமெல்லோரும் அவள் பாதம் பணிய வேண்டும். எனவே எல்லோர்க்கும் அன்னையாக விளங்கும் முத்துமாரி அம்மனை நாம் பக்தி பூர்வமாக வழிபாடு செய்து வந்தால் கேட்ட வரம் யாவும் கிடைக்கும்'' என்றார்.

இவ் வைபவத்தில் பிரதிஷ்டா பூஷணம் நயினை சிவ ஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் உட்பட பலர் அருளுரை வழங்கினார்கள்.

88 AUGUST

A / L வகுப்புக்கள் ஆரம்பம்

1-02-86 சனிக்கிழமை காலை 11-30 மணி

விபரங்கட்கு:-

New Master Institute

BMC Lane, Jaffna. R / 16386

ரான்ஸ் யூறோ ரவல்ஸ்

அமெரிக்கா, கனடா

பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

ந. மகேந்திரராசா

தொடர்பு:-

ரான்ஸ் யூறோ ரவல்ஸ்

6, மொடல் மார்க்கட்

(மேல்மாடி)

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23831

B/1035

சபைத் தலைவர் திரு. கே. நடராஜா பேச்சு:

பனம் பொருட்களை வெளிநாடுகளுக்கனுப்ப இப்போது வசதிகள் கிடைத்துள்ளன

(சாவகச்சேரி)

பனை உற்பத்திப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வசதிகள் கிடைத்துள்ள இன்றைய கால கட்டத்தில், அந்த அரிய வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உற்பத்திகள் நம்மிடம்இல்லை. எனவேவெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான உற்பத்திகளை உற்பத்தி செய்ய நல்ல பயிற்சி வேண்டும். தரமான உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகளை பல வகைகளிலும் அளிப்பதே எமது நோக்கமாகும்.

இவ்வாறு பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராஜா, கைதடியில் அமைந்துள்ள கல்வி வெளிக்கள நிலையத்தில் பனம் பொருள் உற்பத்திகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. க. தங்கராஜா தலைமையில் ஆரம்பமான இந்த வைபவத்தில், பனம்பொருள் அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் கலாநிதி சி. மோகனதாஸ், உசன் மகாவித்தியாலய அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம், மீசாலை விக்னேஸ்வரி மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். என். இராஜநாயகம் உட்பட பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். பிரதம விருந்தினர் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பனையின் மூல வளங்கள் ஏராளம் உண்டு. அப்படி இலகுவாகக் கிடைக்கக் கூடிய பனை மூல வளங்களை நவீன விஞ்ஞான ரீதியிலான அடிப்படையில், நவீன கவர்ச்சிகரமான கைத்தொழிலை மேற்கொள்ளவும், அதைஅயல்நாடுகளுக்கு அனுப்பிப் பயன் பெறவும் பயிற்சிகள் தேவை. அதற்காகவே பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், கல்வி வெளிக்கள நிலையங்களில் நாம் இப்பயிற்சிகளை ஆரம்பித்து வருகிறோம்.

இது மட்டுமல்ல, தொழில் நுட்ப கல்லூரி மூலமும் நாம் இப் பனை மூலவள பயிற்சிகளைக் கொடுத்து வருகிறோம். இதுவரை சுமார் நாலாயிரத்திற்கும் அதிகமானோர் பயிற்சி பெற்றுள்ளனர். தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல பதவிகளை வழங்கவும் சபை திட்டமிட்டு வருகிறது என்று திரு. நடராஜா கூறினார்.

பொது முகாமையாளர் கலாநிதி மோகனதாஸ் பனை வளங்கள் பற்றியும், அவற்றை நாம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அதனால் நாட்டிற்கு விளையும் நன்மைகளையும் எடுத்துக்கூறினார்.

உலக வங்கி உதவியுடன்

வவுனியா மாவட்ட பணி நிறைவுபடுத்த தீர்மானம்

(வவுனியா)

அமைதியற்ற சூழ்நிலை நிலவுகின்ற போதிலும் உலக வங்கியின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளை தீவிர முயற்சியோடு இந்த வருடம் மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் தலைமையில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டப் பணி மனையில் நடைபெற்ற அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான தீவிர நடவடிக்கைகளை ஒவ்வொரு திணைக்களமும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்பதன் அவசியமும் இங்கு எடுத்துரைத்து வலியுறுத்தப்பட்டது.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிகச் செயலாளரும், வடகிழக்கு அபிவிருத்தி திட்டங்களின் இணைப்பாளருமான கலாநிதி ஏ. எஸ். குணசிங்கமும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல நடைமுறைத் தடைகள் இருக்கின்ற போதிலும் இடத்திற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகளை மேற்கொண்டு, ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

1986-ம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 2 கோடி ரூபாவையும் இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் திட்ட வேலைகளில் வெற்றிகரமாக முதலீடு செய்து முடிக்க வேண்டும் என்றும் அதற்காக கிராமோதய சபைகளின் ஒத்துழைப்போடு செயற்படுவதென்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

நுளம்புத் தொல்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் இரண்டாவது பெருமழைக்குப் பின்னர் இப்பொழுது நுளம்புத் தொல்லை எல்லை மீறியுள்ளது. இதனால் சகல குடியிருப்பாளர்களும் பெரிதும் கஷ்டமடைகிறார்கள்.

சிலர் நுளம்புத் தொல்லை சகிக்கேலாது, தீச்சட்டி மூட்டியும் சரிவராது போகவே அதற்குள் மலத்தியோன் போட்டு புகைக்க விடுகிறார்கள். இதனால் காய்ச்சல் வயிற்றோட்டம் ஆரம்பிக்கும் அறிகுறி தெரிகிறது.

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

செல்வன்

வைத்திலிங்கம்

அதிஷ்டலிங்கம்

அன்னை மடி மீது 3-8-1958

இறைவன் மடி மீது 28-12-1985

எமது அன்பின் திருஉருவே பண்பின் பிறப்பிடமே கண்ணின் மணியே உமது மறைவு 31 தினங்களாயினும் உமது நினைவுகள் எமது உள்ளங்களில் நீங்கா நினைவாக நிலைத்திருக்கும். உமது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும் தகப்பனார் எஸ். வைத்திலிங்கம், தாயார் பொன்னம்மா, பேரன் வினாசித்தம்பி, சகோதரர்கள் அருந்தவலிங்கம், குமரலிங்கம், வரதலிங்கம், கிருஷ்ணலிங்கம், சகோதரி அருந்தவநாயகி, மைத்துனர் செல்வராசா, மைத்துனி பானுமதி தேவி, பெறாமக்கள் டினேஸ், டினாத்.

''அதிஷ்டவாசம்''
முருகன் ஆலய வீதி,
45, குமரபுரம், பரந்தன்.

B/1034

உதய சிந்தனை

நாணமற்ற குலமகளும், நாணமுள்ள விலைமகளும் விரைவில் அழிந்து விடுவார்கள். ஔவையார்.

57, கண்டி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

இதயஒலி

30-1-86 வியாழக்கிழமை (குரோதன) தை-17

வடக்கு, கிழக்கு; இன்று மலையகம்

வடக்குக் கிழக்கு மகாணங்களில் இடம்பெற்றது போன்ற ஆரம்பச் சம்பவங்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் கள் அதிகரித்து வாழும் மலையகத்தின் சில பகுதிகளிலும் ஆரம்ப மாகியுள்ளன.

மலையகத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையுடன், பெரும்பான்மை மக்களிடையே கசப்புணர்வு முளைவிடத் தொடங்கியது.

சுதந்திரக்கட்சி உட்பட பல சிங்களக் கட்சிகளும், பௌத்த தருமார்களும் பகிரங்கமாகவே இதனை எதிர்க்கத் தொடங்கி யுள்ளனர்.

உயர் நீதிமன்றத்தில் சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன் னணி ஆகிய இரு கட்சிகளும், பௌத்த பிக்கு ஒருவரும் பிரஜா வுரிமைச் சட்டத்தை எதிர்த்து மனு தாக்கல் செய்திருந்தனர்.

ஆனலும், இம்மனு உயர் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளதாகவும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலா மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாருன ஒரு நிலையில், கடந்த தைப் பூசத்திலன்று தலவாக்கொல்லைப் பகுதியில் ஆரம்பமான இரு இனத்தவரிடை யேயான மோதலை, வெறுமனே திடீரென ஏற்பட்ட ஒரு பிரச் சினை என்று சொல்லமுடியாது.

இதனை, மலையகத் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலாகவே கருத வேண்டும். அதற்கான போதிய சான்றுகளுமுண்டு.

அரசாங்க அறிக்கைகள் கூறுவதுபோன்று இதன்பின்னணி யில் தியசக்திகள் இயங்குகின்றனவென்று மொட்டையாகக் கூற நாம் விரும்பவில்லை.

பல அரசியல் கட்சிகள், முன்னணி, அரசியல் தலைவர்கள் பலர் பகிரங்கமாகவே இதன் பின்னணியில் இருந்து இயங்கு கின்றார்கள் என்பதை அனைவரும் அறிவர்.

1958-ம் ஆண்டிலிருந்து அவ்வப்போது இடம்பெற்று வந்த இனக் கலவரங்களால் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை; மலையக மக்களும் பெரும் பாதிப் படைந்துள்ளனர்

1977-ம், 1981-ம் ஆண்டுகளில் இடம் பெற்ற கலவரங் களின்போது தோட்டத் தொழிலாளர்களே மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் என்பது மறுக்கமுடியாத உண்மை

இதனையடுத்து, பல்லாயிரக்கணக்கான இந்திய வம்சாவழிக் குடும்பங்கள் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்புப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து, குடிசைகளை அமைத்து, மேட்டு நில விவசாயச் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் ஆயுதப்படையினரின் தாக்குதல்களால் அவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதையும் நாம் குறிப்பிட்டாகவேண்டும்

இவ்வாருன ஒரு நிலையில், மலையகத்தின் சில பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் கலவரம், அவர்களது உயிருக்கும் உடைமைக கும் பெரும் அழிவை ஏற்படுத்தலாமென அஞ்சப்படுகின்றது.

"லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளருக்கு பிரஜாவு ரிமை வழங்குவதால், மலையகத்தையும் தமது பாரம்பரிய பிரதே சம் என்று தமிழர்கள் ஒரு காலத்தில் உரிமை கோர இடமளிப் பதாக அமைந்து விடும்" என்று முகியஸ்தர் ஒருவர் அச்சம் தெரிவித்துள்ளமையையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இவ்வாருக மலையக மக்களுக்கு எதிராக, நாட்டின் பொரு ளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தோட்டத் தொழிலா ளர்களுக்கு எதிராக இளப்பப்படும் துவேஷமான வதந்திகள், அவர்களை ஒழித்துக்கட்ட எடுக்கப்படும் நடவடிக்கைகளாகும்.

கடந்த காலங்களில் இந் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களை யும், அதனால் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை யையும் ஒரு பாடமாகக் கொண்டு, அரசாங்கம் இப் புதிய பிரச் சினையை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்.

இல்லையேல், இதன் எதிர் விளைவுகள் மிக ஆழமானவை யாக அமைந்துவிடலாம்.

அமரர் உயர்திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள்

வைத்தீஸ்வரா வித்தியாலயத்துடன் இரண்டறக் கலந்த தமிழ்ப் பெரியார்

வைத்தீஸ்வர வித்தியாலயத் தின் முன்னாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அமரராகி விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய பழைய மாண வர்களாகிய நாம், எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த் திப்போமாக.

வைத்தீஸ்வர வித்தியாலயத் துடன் இரண்டறக் கலந்த ஒரு பெரியார் உளரெனில் அவர் பேரறிஞர் திரு. ச. அம்பிகை பாகன் அவர்களே. சிரியபண்பு, சிறந்தசேவை, செயல்திறன், சமயப்பணி, தமிழ்ப் பற்று, தள ராவுளஉறுதி, நல்லியல்பு ஆகிய அனைத்தையும் ஒருங்கே அமை யப்பெற்ற அன்னரின் சேவை வைத்தீஸ்வர வித்தியாலயத் திற்கு அளப்பரிய தொன்ரு கும்.

1935ம் ஆண்டு தொடக்கம் 1968ம் ஆண்டு வரை ஏறத் தாழ 33வருடங்கள் வைத்தீஸ் வர வித்தியாலயத்தின் அதிப ராக கடமையாற்றியதன் மூலம் ஒரு புதிய சகாப்தத் தையே உருவாக்கிய பெருமை உயர் திரு. அம்பிகைபாக னுக்கே உரியதொன்ருகும். அப்பெருமையின் ஒரு பகுதி யாக எங்கள் அதிபர் அமரர் அம்பிகைபாகன் எனக் கூறிக் கொள்வதில் பழைய மாண வர்களாகிய நாம் பெருமைய டைகின்ரோம். ஓலைக் கொட்டி லாக இருந்த வித்தியால யத்தை மணிமண்டபமாக மாற்றியமைத்தவர் அமரர் அம்பிகைபாகன் அவர்களே. வித்தியாலயத்தை 125 மாண வர்களுடன் பொறுப்பேற்றுக் கொண்ட அவர் அதனை 2000 மாணவர்கள் கல்வி பயிலும் கலைக்கூடமாக மாற்றியமைத் தார். அவரது இச்சேவை என் றும் நிலைத்து நிற்கும்.

கல்லூரியின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி சமய, கலை, கலாச் சாரதுறைகளின் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பங்கு அளப் பரியதாகும். இந்திய-இலங்கை கலாச்சார பண்பாட்டுக்கு அவர் ஒரு பாலமாகத் திகழ்ந் தார். இந்திய அறிஞர்களை அடிக்கடி காணும் பாக்கியத் தையும், அவர்களது கலை, கலாச்சார நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும் மையமாகவும் வைத்தீஸ்வர வித்தியாலயம் அமைய அமரர் உயர்திரு. ச. அம்பிகைபாகனே மூல காரண மாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் ஆகியோரின்

தி. லோகநாதன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

வழி நின்று சைவசமயத் துறைக்கும் பெரும்பங்காற்றி யவர் அமரர் அம்பிகைபாகன். அவரது அயரா உழைப்பும், உளத்தூய்மையுமே வைத்தீஸ் வர வித்தியாலயத்தின் வளர்ச் சிக்கு மூலகாரணி எனலாம்.

இவர் இன்று அமரராகிவிட் டாலும் நாம் இவரது அனுப வத்தையும், இனிய சுபாவத் தையும் பயன் பெற்றுக் கொள்ள பயன்படுத்துவோ மாக. தனமும், கல்வியும், தள ராவுள்ளத்தையும் தரும் தெய் வம் அம்பிகையே. அத்தகைய அம்பிகைபாகனுக (தெய்வ மாக) நின்று எம்மை வழி நடாத்தி செல்ல பழைய மாண வர்களாகிய நாம் அவரை வழி படுவோமாக.

34 வருட சேவையின் பின் ஓய்வுபெறும் ஆசிரியர்

34 வருட ஆசிரிய சேவை யின் பின் ஓய்வு பெறும் திரு. அ. யோசெவ் ஆசிரியர் அவர் கள் ஆசிரியர்கட்கு ஒரு வழி காட்டி. மாணவர்கட்கோர் கலங்கரை விளக்கம். இவர் ஓர் சாதாரண ஆசிரியர் மட்டு மல்ல, சமயாசாரம், ஒழுக்கம், பண்பு மிக்கவர். சமயப்பற் றுள்ள இவர் யாழ். மறைக் கல்வி மன்றத்திலும் பல பதவி கள் வகித்து மங்காப் புகழ் பெற்றவர்.

இவர் தமது ஆரம்பக் கல்வி யை ஆரம்பித்த அதே சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத் தில் 27 வருடம் 7 மாதம் ஆசிரியப் பணிபுரிந்த பின் இம் மாதம் 31 ந் திகதியுடன் ஓய்வு பெறுகின்ரூர். இவர் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டு சம்பத்திரிசியார் கல்லூரியிலும் 10 ம் வகுப்பு வரை ஆங்கிலம் கற்ரூர். 1950 ம் ஆண்டு கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் சேர்ந்து தமிழ் ஆசிரியராகப் பயிற்சி பெற்ரூர். பயிற்சி பெறும் காலத்திலும் அதிபரினதும், ஆசிரியர்களினது ம், சக மாணவர்களினதும் நல்லெண்ணத்தைப் பெற்ற வர் பயிற்சி முடிந்ததும் அன் பும், பண்பும் நிறைந்தவராய் புத்தம் புது மலராய் தமது முதற் பணியைக் கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரியில் ஆரம்பித்தார். தொடர்ந்து கொழும்பு மேட்டுத் தெரு சென். அன்ரனீஸ் பாடசாலை களிலும், யாழ். சென். ரெக்ஸ், யாழ். சென். ஜேம்ஸ் மகா வித் தியாலயத்திலும் தொடர்ந்து பணியாற்றி 34 வருட சேவை யைப் பூரிந்துள்ளார்.

சென். ஜேம்ஸ் மகா வித்தி யாலயத்தின் இரண்டாவது தலை முறையினரை கற்பிக்கும் பேறு இவருக்குக் கிடைத்துள் ளது. இப்பாடசாலையில் நீண்ட கால சேவையில் 11 அதிபர் களைச் சந்தித்துள்ளார். இங்கு கடமையாற்றிய அதிபர்கட் கெல்லாம் ஓர் வழிகாட்டி யாய் விளங்கி, ஆலோசகராக வும் நம்பிக்கைக்குப் பாத்திர மானவராகவும், அவர்களு டைய நிர்வாகம் திறம்பட இயங்க காரியாலய வேலைகளி லும் பாடசாலைக்குள்ளும், வெளி முயற்சிகளிலும் பல பதவிகளைத் தலைமை தாங்கித் திறம்படச் செயலாற்றியுள் ளார்.

ஆரம்ப காலத்தில் பொது விஞ்ஞான கூடம் பெரும் பங்

களிப்பைக் கொடுத்தது மட்டு மல்ல, பொது விஞ்ஞானம், கணித பாடம் என்பவற்றை மேல் வகுப்புகட்கும் கற்பித்து வந்தார்.

இத்துணை அறிவும் ஆற்றலு முள்ள ஆசிரியர்கள் ஆசிரிய உலகிற்கே ஒரு வரப்பிரசாத மாகும். இவரின் சேவையால் ஒளி பெற்ற ஆசிரிய மாணவ சமுதாயம் என்றும் அவரை நன்றியுடன் போற்றிப் புகழும் என்பது திண்ணம்.

S. பெனடிக்ற்
செயலாளர்,
ஆசான் கழகம்.

ஒத்திவைப்பு

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத்தின் சகல கிளை களுக்குமான கிளைத்தேர்தல் களும் சில சம்பவங்களை முன் னிட்டு தேர்தல் அதிகாரி திரு. சிவசுப்பிரமணியம் தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளார். இதனால் நிய மனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தவர்கள் ஏமாற்றமடைந் துள்ளனர். விரைவில் இதற் கான தேர்தல்கள் நடைபெற விருப்பதாக அறியவருகிறது.

ஐவர் வீதம் வருமாறு அழைப்பு

(சுண்டிக்குளி)

யாழ். கோட்டையில் முகா மிட்டுள்ள இராணுவத்தை அகற்றுமாறும், இராணுவ முகாம்களைச் சுற்றி ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலய உத் தரவை நீக்குமாறு கோரியும் நடாத்தப்பட்டு வரும் மறியல் போராட்டத்தில் யாழ்.மாவட் டத்திலுள்ள பதிவு செய்யப் பட்ட சனசமூக நிலையங்களும் பங்குபற்றவுள்ளன.

இம்மறியல் போராட்டத் தில் இம் மாவட்டத்திலுள்ள 675 சனசமூக நிலையங்கள் ஈடு படவுள்ளன என்றும், ஒவ் வொரு சனசமூக நிலையத்திலி ருந்தும் ஐந்து பிரதிநிதிகள் வீதம் இம்மறியல் போராட் டத்தில் கலந்து கொள்வரென் றும், யாழ். செயலகம், அரச அலுவலகங்களின் முன் நடை பெறும் இம்மறியல் போராட் டத்தில் சனசமூக நிலையங்க ளும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டுமென்றும் யாழ். மாவட்ட சனசமூக நிலை யங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. சி சி. வரத ராசா வேண்டுகோள் விடுத் துள்ளார்.

அண்ணல் காந்தி வழி தொடர்வோம்!

ஐக்கியம் தனை வளர்த்து
அகிம்சை எனும் பாதை காட்டி
சத்தியச் சுருதி கூட்டி
சுதந்திரமாம் வாழ்வு பெற
மக்கள் தமை வழி நடத்தி
மகாத்மாவாய் ஒளிரும் அண்ணல்
தத்துவத்தில் தொடர்ந்து செல்வோம்
தரணியிலே தலை நிமிர்வோம்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்
(இன்று மகாத்மாகாந்தி நினைவு தினம்)

அமெரிக்க விண்வெளிக்கலம்

சலஞ்சர் வெடித்து சிதறியது!

(வாஷிங்டன்)

அமெரிக்க விண்வெளிக் கலமான சலஞ்சர் மேலெழுந்த எழுபத்தைந்து வினாடிகளில் பயங்கரமாக வெடித்துச் சிதறியது என்றும் அதில் இருந்த ஏழு விண்வெளி வீரர்களும் மாண்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. இக்கோர விபத்து குறித்து அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகன் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய நேரப்படி செவ்வாய்க்கிழமை இரவு 10.08க்கு ஹேட் கெனடி விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து புறப்பட்ட இக்கலம் குறிப்பிட்ட எழுபத்து ஐந்து வினாடிகளுக்கெல்லாம் தீப்பிழம்பு வெளிப்பட்ட நிலையில் வெடித்துச்சிதறி, புறப்பட்ட இடத்திலிருந்து பதினான்கு கிலோமீற்றர் தொலைவில் உள்ள நீர்ப்பரப்பில் வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புக்குக் கப்பல்கள் விரைந்தும் பயனற்றுப் போய்விட்டன என்று கூறப்படுகிறது.

தனது உயரதிகாரிகளுடன் பகல் போசனமருந்திக் கொண்டிருக்கையில் திரு. றீகனுக்கு இச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அன்றிரவு நாட்டுமக்களுக்கான இரவு வானொலி உரையை அவர் பின்போட்டார்.

முழுநாடுமே இவ் விபத்தால் அதிர்ச்சியடைவதாகக் கூறிய அவர் முழு விசாரணை நடைபெறும்வரை இனிவிண்வெளிட பயணம் ஏதுமில்லை என்றும் அறிவித்தார்.

இக்கலத்தில் தேசிய ரீதியிலான பாட ஆசிரியை மெக்கோவும் இருந்தார். மற்றும் அறுவருடன் மடிந்தார்.

இருபாடல்களை அவர் ஒலிபரப்புச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவர் அக்கலத்தில் தீயுடன் சங்கமமாவதை அவரது கணவரும் ஒன்பது வயது மகளும் பெற்றோரும் கலம் புறப்பட்ட இடத்திலிருந்து கலக்கத்துடன் கண்டனர். தொலைக்காட்சியிலும் விபத்து குறித்து காண முடிந்தது.

புறப்படும்போது எக்குறைபாடும் இதில் இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் வழங்கும் றொக்கெட்டில் நெருப்பு வந்ததைத் தொடர்ந்து கலம் தீப்பிழம்பாகியது என்றும் அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யா, ஜப்பான், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் உட்பட பல உலக நாடுகள் இவ்விபத்து குறித்து கவலை தெரிவித்துள்ளன. ஐ. நா. பொதுச்செயலாளர் திரு. பெரஸ்டி குவெல்லரும் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

பிந்திய செய்தி

(புதுடில்லி)

அமெரிக்க விண்வெளிக்கலம் விபத்துக்குள்ளானது குறித்துப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதிர்ச்சியையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

120 கோடி டாலர் செலவில் உருவான 100 தொன் எடையுள்ளது குறிப்பிட்ட விண்வெளிக் கலமாகும்.

தொடர்ந்து விண்வெளிப் பயணம் மேற்கொள்ளப்படும் என்று திரு. றீகன் நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் அனுதாப உரை நிகழ்த்துகையில் கூறியுள்ளார் என்று நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது. இது மிக மோசமான விண்வெளி விபத்து எனத் தெரிவிக்கப்படுகிறது.

பத்து மைல் தொலைவில் விபத்து சம்பவித்தது. விண்வெளியில் மனித சமுதாயம் குடியேறும் சகாப்தத்தை உருவாக்குவதற்கான விண்வெளிக் கலப் பயணத்தின் எதிர்காலம் தற்போது கேள்விக்குறியாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

திங்களன்று பங்களாதேஷில் ஹர்த்தால்

(டாக்கா)

பங்களாதேஷில் இராணுவ ஆட்சியை அகற்றிப்பராமரிப்பு அரசு நிறுவி தேர்தலை நடத்துமாறு வற்புறுத்தி இரு முக்கிய எதிர்க்கட்சிக் கூட்டணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை நாடு தழுவிய ஹர்த்தாலை நடத்தவுள்ளன.

அன்றைய தினம் நீதிமன்றங்களும் பகிஷ்கரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளன.

உ.பியில் சாலைப் போராட்டம் தோல்வி என்கிறது அரசு!

(புதுடில்லி)

உத்தரப் பிரதேஷில் எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த சாலைப் போக்குவரத்துத் தடைப் போராட்டம் தோல்வியடைந்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

விவசாயிகளின் வரி தொடர்பான கோரிக்கையை வற்புறுத்தி சட்டசபை எதிர்க்கட்சியான லோக்தள் இப்போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

இப்போராட்ட முயற்சி தொடர்பாக சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபத்து நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேலும் மூவாயிரம் பேர் கைதாகினர்.

தமது போராட்டம் வெற்றி என எதிர்க்கட்சி சார்பில் திரு. குப்தா தெரிவித்துள்ளார்.

பெப். 7ல் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலையொட்டி உஷார் நிலையில் ராணுவம்

(மணிலா)

அடுத்த மாதம் ஏழாம் திகதி நடைபெறவுள்ள பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. விசேட கெரில்லா தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளர்ச்சியாளரிடம் தற்கொலைக் குழுக்கள் இருப்பதாகவும் அரசு கருதுகிறது.

தான் தோல்வியடையும் நிலை உருவானால் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் தேர்தலை நடத்தாமலே ரத்துச் செய்து விடுவார் என எதிர்க்கடசிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பாகிஸ்தானில் 35 உறுப்பினர் சமஷ்டி மந்திரி சபை பதவியேற்றுள்ளதாக தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் முப்பத்து ஐந்து உறுப்பினர் சமஷ்டி மந்திரி சபை பதவியேற்றுள்ளது.

ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் இப்பதவிப் பிரமாணத்தைச் செய்து வைத்தார்.

நிதி, திட்டமிடல் மந்திரிப் பதவியை வகித்த குர்கர், இப்பட்டியலில் இடம்பெறவில்லை. நிதிமந்திரியாக மாற்றா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பையும் பிரதம மந்திரி ஜூனெஜோவே ஏற்றுக் கொண்டுள்ளார். வெளிநாட்டமைச்சராக யாக்கூப்கான் இருப்பார்.

இப்பட்டியலில் 22 பேர் காபினெட் மந்திரிகள், 13 பேர் ஸ்டேட் மந்திரிகளாவர்.

ஜோர்தானில் போதைவஸ்து கடத்தலுக்குமரணதண்டனை அரசாங்கம் தீவிர யோசனை

(அம்மான்)

ஜோர்தானில் போதை வஸ்துக் கடத்தலுக்கு மரண தண்டனை மற்றும் கடும் தண்டனைகள் விதிப்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறது.

ஜோர்தானில் போதை வஸ்துப் பாவனை கடுமையாக இல்லாத போதிலும் கடத்தலுக்கு இது கேந்திர ஸ்தானமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சின்னஞ்சிறு செய்திகள்

நோயாளர் அதிகரிப்பு

(பூநகரி)

முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் தினம் தினம் அளவுக்கதிகமாக வந்து குவியும் நோயாளர்களால் தனி ஒரு டாக்டரால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

புதிதாக நிறுவப்பட்ட அகதிகள் குடியேற்றத்திட்டமான ஜெயபுரத்தில் இருந்தும் பெருந்தொகையான நோயாளர்கள் வருவதும் இதற்கொரு காரணமாகும் மல்லவராயன் கட்டு குமிழமுனை, நாச்சிக்குடா வெள்ளாங்குளம், பாலியாறு போன்ற கிராமங்களில் பரவி வரும் புதுவித காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் சென்ற வாரம் முதல் மூன்று நாட்களிலும் 724 பேர் சிகிக்சை பெற்றுள்ளதாக தெரிய வருகிறது

காலை தொடக்கம் இரவு வரை உள்ளம் சலிக்காமல் தனி ஒருவராக இங்கு சேவை செய்து வரும் டாக்டரின் சேவையை பாராட்டாதவர்களே இல்லை எனலாம்.

இவர்களின் நன்றி

(வேலணை)

ஊர்காவற்றுறை தொகுதியில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம் பிள்ளை இலங்கைதமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு தீவுப்பகுதி பெற்றோர்களும், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் லேலணைக் கிளையும் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவ் ஆசிரியர் நியமனம் எங்கு மிக அவசியமென கருதப்படுகிறதோ அங்கு நியமிப்பது நல்லதென இவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள். 24 ந்திகதிய ஈழமுரசு தீவுப்பகுதியில் பணிபுரிய புதிய ஆசிரியர்கள் தயாரா என்ற தலையங்கமிட்டு வந்த செய்திக்கும் இவர்கள் ஈழமுரசுக்கு நன்றி தெரிவிக்கின்றார்கள்.

கிராமிய தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோள்

"கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களினால் யாழ். குடாநாட்டுக்குள் வாழ்ந்தவர்களைவிட வெளியே வாழ்ந்த மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். அப்பொழுது அவர்களைப்பற்றி அதிக கவனம் செலுத்தாத நாம் தற்பொழுது எமது வீட்டு வாசலில் எதிரியுடன் எதிர்கொள்ளும் போது தான் விழித்துக் கூக்குரல் போடுகிறோம். எனவே ஏனைய பிரதேச மக்கள் மத்தியில் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதன் ஊடாக அவர்களையும் இணைத்து நடத்துவதே உண்மையான போராட்டமாகும்" என கிராமிய தொழிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அளவெட்டியில் இன்று

(அளவெட்டி)

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக அளவெட்டி சமாதான சபை ஆதரவில் 'கதம்ப இரவு' என்ற கலை நிகழ்ச்சி இன்றிரவு அளவெட்டி வடக்கு கும்பலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது. பிரபல அறிவிப்பாளர் திரு. கே. எஸ். ராஜாவும் கலந்து கொள்வார்.

ஆலயம்

(புலோலி)

துன்னாலைவெலிக்கம்தோட்ட விநாயகராலய "திருக்குட முழுக்கு" மிகச் சிறப்பாக நடைபெற்றது. சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்விநாயகராலயம் 1700ம் ஆண்டளவில் பிராமணக் குடும்பங்களினால் அமைக்கப்பட்டதாகும்.

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை இராசதுரை

(பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

27-1-86 இல் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-1-86ல் 3-00 மணியளவில் 31, மானிப்பாய் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். அவர், சிவயோகத்தின் அன்புக் கணவரும், இரஞ்சிதமலர் U K., யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரன், செந்தமிழ்ச் செல்வி, சாந்தநாயகி, வதனி என்போரின் அன்புத் தந்தையும், நாகராஜா U. K , சிவதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ஆரணியின் பேரனாரும், சிவலிங்கம் (சிவலிங்கம் மோட்டோஸ் உரிமையாளர்), குணரத்தினம் (பிள்ளையார் மெற்றல் வேக்ஸ் உரிமையாளர்), அபிமன்யு (சிவா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), சகாதேவன் (பிள்ளையார் ரேடிங் கொம்பனி உரிமையாளர்) தையல் நாயகி, சகுந்தலை ஆகியோரின் சகோதரரும், காலம் சென்ற பாலசுப்பிரமணியத்தினதும், பரஞ்சோதி நாதன் (ஜோதி விலாஸ் உரிமையாளர், மன்னார்), பாலகிருஷ்ணன் (பாலகிருஷ்ணா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), பாலச்சந்திரன்(கல்விஇலாகா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

R /1040

தமிழ்முரசு

பண்டாரியின் இறுதி விஜயம்; 3ஆம் திகதி கொழும்பு வருகிறார்

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு வரவுள்ளார். 4 ஆம், 5ஆம் திகதிகளிலும் கொழும்பில் தங்கியிருக்கும் திரு. பண்டாரி இப் பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடனும் மற்றும் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார். இதுவே திரு பண்டாரியின் இது தொடர்பான இறுதி இலங்கை விஜயமாக இருக்குமெனக் கூறப்படுகின்றது.

லோகசபாவில் எம். பீக்கள் பேச்சு:

இலங்கைப்பிரச்சினையில் உடன் நடவடிக்கை எடுக்காவிடின் தீர்க்க முடியாது போய் விடும்

(புதுடில்லி)

''இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் தீர்க்கவே முடியாத நிலை உருவாகலாம் என்று பல லோகசபை எம். பிக்கள் கவலை வெளியிட்டனர்.

இந்நிலை குறித்த கவலையில் பாரத அரசும் பகிர்வு கொள்வதாக அமைச்சர் திரு. பகத் இதற்குப் பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இராணுவரீதியில் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என தலைவர்கள் விடுத்துவரும் அறிக்கைகள் குறித்தும் இக் கூட்டத்தில் மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டது

அஹிம்சை...

எம். ஏ. சி. இக்பால் தனது உரையில், ''அரசு கொடிய சட்டங்களாலும், பாதுகாப்பு படைகளின் மூலமும் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி அவர்களை அழித்தொழிக்க முயற்சி செய்கின்றது. இன்று இங்கு நடந்த மாபெரும் ஊர்வலம் மக்களின் மாபெரும் ஆத்மீக பலத்தை எடுத்துக் காட்டுகின்றது. இந்த அமைதியான சாத்வீகமான போராட்டத்துக்கு அரசு மதிப்பளிக்கத் தவறினால் மக்கள் தமது வழியை மாற்றி ஆயுதம் தாங்கிய இளைஞர்களுடன் சேர்ந்து போராடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்'' என்றார்.

வடபிரதேச தேசிய கூட்டுச் சபையை சேர்ந்த விஜயானந்தன் தனதுரையில், ''அன்னையர் முன்னணி நடாத்திவரும் மறியல் போராட்டத்திற்கு ஆதரவாக இன்று நடைபெற்ற ஊர்வலத்தில் சகல வெகுஜன இயக்கங்களும் பங்குபற்றியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். தற்போது போராட்டம் பல முனைகளிலும் வியாபிக்கும் போது அரசு கொடிய சட்டங்கள் மூலம் அவற்றை அடக்கி ஒடுக்கமுனைகின்றது'' என்றார்.

தமிழாசிரியர் சங்க செயலாளர் திரு. மகாசிவம், ஈழவர் முன்னணியை சேர்ந்த திரு. ராஜ்குமார், இலங்கை ஆசிரியர் சங்கத்தை சேர்ந்த திரு. வி. சிவராசா, பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி உட்பட பலர் உரையாற்றினர்.

ஊர்வலத்தில்...

வித்துச் சென்றன.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கமும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்கு பற்றியது. ஆசிரியைகளை அதிகமாகவும், பல கோஷங்களை எழுப்பியும், சுலோகங்களை சுமந்தும் சென்றனர்

யாழ்நகரிலுள்ள கல்லூரிகள் அனைத்திலிருந்தும் மாணவர்கள் வரவு மிகவும் குறைவாகவேயிருந்தது. பின்னர் மாணவர்கள் வகுப்புக்கள் நடக்காததால் வீடு திரும்பிவிட்டனர்.

ஊர்வலம் நடந்து கொண்டிருக்கும் போது திடீரென வாகனம் ஒன்றில் வந்திறங்கியவர்கள் பஸ் நிலையத்தில் தெருக் கூத்து ஒன்று நடாத்தினர். பின்னர் இயக்கப் பிரமுகர் ஒருவர் ஒலிபெருக்கி மூலம் வானிலிருந்து மேல் ஏறி ஆயுதப் போராட்டத்தை வளர்த்தெடுப்பது, வெகுஜன மக்கள் போராட்டமே எனக் கூறி, சகல மக்களையும் ஊர்வலத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மன்னாரில்...

லில் வந்த இராணுவத்தினர் மன்னார் பரப்புக் கடந்தானில் உள்ள மாப்பே என்னும் இடத்தில் தற்காலிக முகாமிட்டுள்ளதாகவும், கண்டலுக்கு ஆறு கவசவாகனங்களில் இராணுவம் சென்றுள்ளதாகவும் புலிகளின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியுடன் சம்பாஷிக்க வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி இன்னமும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் கொழும்பு செல்வார் என்றும் பாரத அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இன்று

மானிப்பாய் பிரதேச வெகுஜன அமைப்புக்களின் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டாக்டர்கள் சுகவீன லீவு

கொழும்பு ஆஸ்பத்திரியில் சகல டாக்டர்களும் சுகவீன லீவு அனுப்பி வேலைகளுக்குச் செல்லவில்லை. இப் பகிஷ்கரிப்பு மற்றைய வைத்தியசாலைகளுக்கும் பரவலாம் என அஞ்சப்படுகிறது.

மலையகத்தில்....

பாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் மலையகத்தின் நிலை இப்பொழுது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகத் தெரிவித்தார்.

இது ஒரு உள்ளூர்ப் பிரச்சினை எனவும் தெரிவித்த அமைச்சர் அல்விஸ், நாடற்ற மக்களுக்கு குடியுரிமை வழங்கியதால் இப்பிரச்சினை ஏற்பட்டதெனக் கூறப்பட்டதையும் மறுத்தார்.

இனப்பிரச்சினையை ...

வேற்றப்பட்டது.

யாழ். கோட்டை இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற வேண்டும்; ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலய அறிவிப்பை ரத்துச் செய்யவேண்டுமென அரசைக் கோருவதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

சம்பள உயர்வு, பெற்றோல் அலவன்ஸ் போன்ற பல கோரிக்கைகளை முன் வைத்து எதிர் வரும் 18ம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

ஈழத்தமிழர்...

வலத்தில் குடாநாட்டிலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள், தமிழாசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், ஈழவர் முன்னணி, அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், சீமேந்து தொழிலாளர் சங்கம், சமூக அபிவிருத்தி முன்னணி, இனங்களுக்கிடையேயான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம், வர்த்தகர் சங்கம் உட்பட பல வெகுஜன இயக்கங்கள் கலந்து கொண்டன

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் விரிவுரைகளை பகிஸ்கரித்து விட்டு இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளும் குருக்கள்மார்களும் இவ்வூர்வலத்தில் பங்குபற்றினர். சிலகுழுக்கள் புரட்சிப் பாடல்களைப் பாடியவண்ணம் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

'பௌத்தகுருக்களே பௌத்தகோட்பாடுகளை சிதைக்காதீர்கள்' 'ஆயுதப்படை இறந்தால் நட்டஈடு பொதுமக்கள் இறந்தால் பயங்கரவாதி' 'இராணுவத்தீர்வு வேண்டாம் அரசியல் தீர்வு வேண்டும்', 'இஸ்லாமிய மக்களை வாழவிடு', 'மலையக சகோதரர்களை துன்புறுத்தாதே', 'தார்மீக ஆட்சியில் நீங்களும் வாழுங்கள் எங்களையும் வாழவிடுங்கள்' போன்ற நூற்றுக்கணக்கான சுலோகங்கள் ஊர்வலத்தில் காணப்பட்டன. ஊர்வலம் செயலக முன்றலையடைந்ததும் பல்வேறு அமைப்புகளினதும் பிரதிநிதிகள் அங்கு உரையாற்றினர்.

இறுதியில் 'நிறம்மாறும் மனிதர்கள்' என்னும் தெருக் கூத்தும் சில இளைஞர்களால் நடித்துக்காண்பிக்கப்பட்டது.

அன்னையர் முன்னணியினர் நன்றிகளைதெரிவிக்கின்றனர்

(சுண்டுக்குளி)

யாழ். அரசாங்க செயலகம் முன்பாகக் கடந்த ஆறு தினங்களாக அன்னையர் முன்னணியினர் யாழ். கோட்டையிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு கோரி நடாத்தி வந்த மறியல் போராட்டம் நேற்று புதன்கிழமையுடன் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

அன்னையர் முன்னணியின் இணைச் செயலாளர்கள் திருமதி நிர்மலா பாலரத்தினம், திருமதி கணேஸ் பாலசிங்கம் ஆகியோர் இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் பொது மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர் பிரஸ்தாப அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"இராணுவ முகாம்களைச் சுற்றி ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயங்களை நீக்கும்படியும், கோட்டையிலுள்ள இராணுவ முகாமை அகற்றும்படியும் கோரி அன்னையர் முன்னணியினர் யாழ். கச்சேரி முன்பாக நடத்திவரும் மறியல் போராட்டத்தைத் தற்காலிகமாகச் சில நாட்களுக்கு இடை நிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளனர். மக்களின் அன்றாட அலுவல்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்த மனமும், உணவு விநியோகத்தைத் தடைப்படுத்தாமலும் இருப்பதற்காக அன்னையர் முன்னணி இம் முடிவை எடுத்துள்ளது.

பனைவள ஆராய்ச்சி நிலையம் கைதடியில் அமைக்கப்படும்

(சுண்டுக்குளி)

பனை அபிவிருத்திச் சபையின் தேசிய பனை வள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம், தலைமைக் காரியாலயம் ஆகியவற்றிற்கான அடிக்கல் இம்மாதம் 31ம் திகதி நாட்டப்படவுள்ளது. 25 லட்சம் ரூபா செலவில் இப் புதிய கட்டடம் அமையும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவரும் விஞ்ஞான ரீதியிலான பனைவள ஆராய்ச்சி வேலைகளைத் துரிதப்படுத்தும் வகையிலான இப் பனைவள ஆராய்ச்சி நிலையத்திற்கான அடிக்கல்லைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா நாட்டி வைப்பார்.

கொள்ளை போன நகைக்கு 3ம் திகதி முதல் நஷ்டஈடு

சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்டு பின்னர் களவாடப்பட்ட நகைகளுக்கான நட்டஈடு எதிர் வரும் 3ம் திகதி திங்கட் கிழமை தொடக்கம் வழங்கப் படவிருக்கிறது. இந்தநட்டஈடு சங்கானைப்பகுதி மக்களின் வசதிகருதி சுன்னாகம் கிளையிலிருந்து வழங்கப்படும்.

களவாடப்பட்ட நகைகளுக்கு பவுண் ஒன்றுக்கு ரூபா 2800/- வீதம், நவ் ஒன்றுக்கு 100 போர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

சடலம்

(கல்வியங்காடு)

கோப்பாய் ராச வீதியில் உள்ள கத்தரித் தோட்டம் ஒன்றுக்குள் சுமார் முப்பத்தைந்து வயதுடைய ஒரு ஆணின் சடலம் நேற்றுக் காலை கிடக்கக் காணப்பட்டது. உடலில் துணியின்றி மல்லாந்த நிலையில் கிடக்கக் காணப்பட்ட இந்த சடலத்துடன் சில கத்தரிக்காய்கள் நிரப்பிய உரப்பை யொன்றும் இருக்கக் காணப்பட்டது.

பீரங்கித்....

பிள்ளை (23) முல்லைத்தீவு, செ. சந்திரக்குட்டி (53) மன்னார் ஆகியோரே காயமடைந்தவர்கள்.

முல்லைத்தீவுச் சந்தியில் நேற்று கண்ணிவெடி ஒன்று வெடித்ததைத் தொடர்ந்து இராணுவத்திற்கும் போராளிகளுக்குமிடையே சிறு மோதல் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ கவசவாகனங்களை நோக்கிக் கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் இராணுவத்தினர் பதில்தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

மரண அறிவித்தல்

யோகேஸ்வரி தியாகராஜா

கந்தர்மடம் திருமதி யோகேஸ்வரி தியாகராஜா காலமானார். அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா (உணவுத்திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. சபாநாதன் (முன்னாள் ஹட்டன் நாஷனல் வங்கி) திருமதி சௌந்தரலட்சுமி வடிவேலு, சட்டத்தரணி சிவகுருநாதன் (பிரதம ஆசிரியர்-தினகரன்), பொறியியலாளர் கமலநாதன் (நியூஸிலாந்து), டாக்டர் பாஸ்கரநாதன் (நியூஸிலாந்து), ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரு. வி. எஸ். வடிவேலு (முன்னாள் புகையிரத இலாகா), திருமதி மனோன்மணி, திருமதி தனரஞ்சிதமணி, திருமதி சரோஜினி, திருமதி மீனா ஆகியோரின் அன்புமைத்துனியுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 30-1-1986 இன்று வியாழக்கிழமை 101, அரசடி வீதி, கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.30 மணிக்கு தனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:- இ. சிவகுருநாதன்

B/1042

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 30 - 01 - 86 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336